**செ. கு. எண்: 109** **நாள்:13.09.2019**

# தொடர்ந்து வெற்றிப் பாதையில் பயணிக்கும் தமிழ்நாடு தொழில் துறையின் சாதனைகளைப் பொறுக்க முடியாமல், அறியாமையில் வெற்றுக்கூச்சல் போட்டுக்கொண்டிருக்கும் எதிர்கட்சித் தலைவருக்கு கண்டனம் தெரிவித்து மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்களின் அறிக்கை

ஜனவரி 2019–ல் வெற்றிகரமாக நிறைவுற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டினைத் தொடர்ந்து, ஒன்பதே மாதங்களில் முதலமைச்சரின் திருக்கரங்களால் 22 நிறுவனங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது; 4 நிறுவனங்களின் முழுமையான வணிக உற்பத்தியும் துவங்கப்பட்டது; ஹுண்டாய் நிறுவனத்தின் புதிய மின்சார வாகனம் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டது. தங்கள் ஆட்சிக்காலத்தில் தமிழ் நாட்டையே இருளில் மூழ்கடித்து, தொழில் நிறுவனங்களை சொல்லொணாத் துயரில் ஆழ்த்தியவர்கள், தற்போது தமிழ்நாட்டின் தொழில் துறையின் வெற்றிப்பயணத்தைப் பொறுக்க முடியாமல் வெற்றுக் கூச்சல் போட்டுக்கொண்டிருக்கின்றனர்.

‘‘கற்றிலதாயினும் கேட்க’’ என்பார்கள். மிகுந்த வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தொழில் முதலீடுகளை ஈர்க்கும் தமிழ்நாடு அரசின் பல்வேறு முயற்சிகள் குறித்து சட்டப்பேரவையில் கொள்கை விளக்கக் குறிப்பில் விரிவாகத் தெரிவித்தாலும், அவர்களின் கண்கள் அதைக் காண மறுத்து இருளில் இருப்பதையே விரும்புகின்றன. தெளிவாக எடுத்துச் சொன்னாலும் அவர்கள் செவிகள் கேட்க மறுக்கின்றன. அது போதாது என்று மேடைதோறும் தங்கள் அறியாமையை தொடர்ந்து வெளிக்காட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் பரிதாபம் தான் மிஞ்சுகிறது.

இருளில் மூழ்கிவிட்ட அவர்கள் கண்களுக்காகவும், கேட்க மறுக்கும் செவிகளுக்காகவும், உலகெங்கும் வெற்றி முரசாக உரக்க ஒலிக்கும்

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி குறித்த புள்ளிவிவரங்கள் இதோ மீண்டும் ஒருமுறை விரிவாக: -

இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின்படி, 2006 ஆம் ஆண்டு ஜீன் மாதம் முதல் 2011 ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான திமுக ஆட்சி காலத்தில் வந்த மொத்த அந்நிய நேரடி முதலீடு 25,977 கோடி ரூபாய் மட்டுமே. சராசரியாக ஒவ்வொரு ஆண்டும் சுமார் 5,200 கோடி ரூபாய். 2011 ஆம் ஆண்டு ஜீன் முதல் 2019 ஜீன் வரையிலான அஇஅதிமுக ஆட்சி காலத்தில் வந்துள்ள மொத்த அந்நிய நேரடி முதலீடு 1.47 இலட்சம் கோடி ரூபாய். சராசரியாக ஒவ்வொரு ஆண்டும் 18,350 கோடி ரூபாய் ஆகும்.

ஆக திமுக ஆட்சி காலத்துடன் ஒப்பிடுகையில் **மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆட்சி செய்துவரும் ஒவ்வொரு வருடத்திலும் மூன்றை மடங்கு அளவிற்கு அந்நிய நேரடி முதலீடு வந்துள்ளது.**

## உலக முதலீட்டாளர் மாநாடு 2015

உலக முதலீட்டாளர் மாநாடு 2015–ல் பல்வேறு துறைகள் சார்பாக கையொப்பம் இடப்பட்ட 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் குறு சிறு மற்றும் நடுத்தரத்தொழில் துறையில் கையெழுத்திடப்பட்ட 10,073 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட முதலீடு 2,42,160 கோடி ரூபாயாகும்.

கடந்த 18 ஆண்டுகளில் வரப்பெற்ற அந்நிய நேரடி **முதலீடான ரூபாய் 1.8 இலட்சம் கோடியில் சுமார் 47 சதவீதம், அதாவது 84,269 கோடி ரூபாய்**, 2015–ல், மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா அவர்களால் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்ட உலக முதலீட்டாளர் மாநாட்டிற்கு பிறகு தான் வரப்பெற்றுள்ளது (செப்டம்பர் 2015 முதல் மார்ச் 2019 வரை). மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்

மற்றும் அதிகாரிகள் உலகெங்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, தமிழ்நாட்டின் சிறப்புகளை எடுத்துரைத்து, முதலீடு செய்ய அழைப்புவிடுத்ததே இதற்கு காரணம். முதலீடுகளை ஈர்க்க வெளிநாடு செல்லவில்லை என்பதைக்கூட ஒரு சாதனையாக கூறிக்கொண்டு இருந்தால் போட்டிகள் நிறைந்த உலகில் எந்த முதலீடும் வராது; சுழன்று வேலை செய்தால் தான் முதலீடுகள் வரும் என்பதற்கு இதுவே சான்று. **முந்தைய 15 ஆண்டுகளில் வரப்பெற்ற மொத்த அந்நிய நேரடி முதலீட்டிற்கு ஈடாக மாநாடு நடைபெற்ற நான்கே ஆண்டுகளில் தமிழ்நாடு புதிய அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்த்துள்ளது என்பதை விட உலக முதலீட்டாளர் மாநாட்டின் வெற்றிக்கு வேறு சான்று என்ன வேண்டும் ?**

மேலும், Centre for Monitoring Indian Economy (CMIE) நிறுவனம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின்படி, கடந்த **நான்கு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தனியார் துறை முதலீடு ரூபாய் 1,02,772 கோடி ஆகும்.**

**2015** உலக முதலீட்டாளர் மாநாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்ட பல்வேறு நிறுவனங்களின், **1,04,961 கோடி ரூபாய் முதலீடு பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளது. 1,61,822 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கப்பட்டுள்ளது.**

இவற்றில் செயல்பாட்டிற்கு வந்து வணிக உற்பத்தி மேற்கொண்டு வரும் சில நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:-

Apollo Tyres, DLF Infocity, Gamesa, KEF - Krishnagiri, Saint Gobain, ITC Limited, HCL, CPCL – Expansion, Amway – Expansion, WIPRO, Lotus Footwear, Mando – Hella, Sekisui – DLJM, TVS Motors, Sun Edison Solar Power, NCR Corporation, Gulf Oil Lubricants, Sojitz Motherson Industrial Park, Sheng-

Long Biotech Ltd, Codissia Industrial Park, SRG Apparels, Maruchan Ajinomoto, Takasago, Samsung, Mizuho Bank, Bank of Tokyo, Sumitomo – Mahindra & Mahindra Industrial Park, Poppys Knitwear, Apollo Polyvinyl Pvt. Ltd., TAFE, MRF Limited – Expansion, TNPL, Growth Link, Welspun Renewbles, Sudhan Spinning Mills, Leo Prime Payment Solutions Pvt. Ltd.,

| வ. எண் | துறை | புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | உத்தரவாதம் அளிக்கப்பட்ட முதலீடு (ரூ. கோடிகளில்) | துவங்கப்பட்டு பல்வேறு நிலையிலுள்ள திட்டங்கள் | | உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | திட்டங்களின் எண்ணிக்கை | முதலீடு (ரூ. கோடிகளில்) | |
| 1 | தொழில் | 50 | 1,04,286 | 42 | 49,986 | 29,762 |
| 2 | தகவல் தொழில் நுட்பம் | 17 | 10,950 | 12 | 10,950 | 50,932 |
| 3 | எரிசக்தி | 15 | 1,07,136 | 4 | 42,500 | 1,106 |
| 4 | கைத்தறி – காதி | 10 | 1,955 | 7 | 1,225 | 1,862 |
| 5 | கால்நடை– மீன் | 4 | 500 | 2 | 300 | 260 |
| 6 | வேளாண்மை | 2 | 800 | -- | -- | -- |
| | **மொத்தம்:** | 98 | 2,25,626 | **67** | **1,04,961** | **83,922** |
| 7 | சிறு, குறு நடுத்தர தொழில் | 10073* | 16,533 | **5813*** | **--** | **77,900** |
| | **மொத்தம்:** | 98 | 2,42,160 | **67** | **1,04,961** | **1,61,822** |

## <u>உலக முதலீட்டாளர் மாநாடு 2019</u>

உலக முதலீட்டாளர் மாநாடு **2019–ல்** பல்வேறு துறைகளின் சார்பாக கையொப்பம் இடப்பட்ட **304** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை சார்பில் கையொப்பம் இடப்பட்ட **12,360** புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட முதலீடு ரூபாய் **3,00,431** கோடியாகும்.

இதில் **221 நிறுவனங்கள் பணிகளை துவக்கி, பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. இது மொத்த ஒப்பந்தங்களின் எண்ணிக்கையில் 73 சதவீதம் ஆகும்.** சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறை சார்பில் கையொப்பம் இடப்பட்ட 2,783 தொழில் திட்டங்கள், பணிகளை துவக்கி பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.

Hyundai, MRF, TPI Composites, Mando, Sundaram Clayton உள்ளிட்ட **22 திட்டங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. Ekki Homa, Renatus, Syrma Technology, Therelek ஆகிய நிறுவனங்கள் தங்களது வணிக உற்பத்தியை துவக்கிவிட்டன.** இவை தவிர Hyundai நிறுவன விரிவாக்கத்தின் முதல் பகுதி செயலாக்கத்திற்கு வந்து, அதன் மூலம் சென்னையில் தயாரித்த Kona மின்சாரக் கார் சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டது.

மேலும், பெருந்தொழில் துறை சார்பில் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்களில் **Yamaha Music, Hanon, Rajapalayam Mills Ltd, Niswin Foods** ஆகிய நிறுவனங்கள் விரைவில் முழு வணிக உற்பத்தியைத் துவங்க தயார் நிலையில் உள்ளன.

| வ. எண் | துறை | புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் | உத்திரவாதம் அளிக்கப்பட்ட முதலீடு | இதுவரை பணிகளை துவங்கியுள்ள நிறுவனங்களின் |
|---|---|---|---|---|

| | | | (ரூ. கோடிகளில்) | எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| 1 | தொழில் துறை | 147 | 1,55,248 | 139 | |
| 2 | தகவல் தொழில் நுட்பம் துறை | 11 | 11,874 | 7 | |
| 3 | எரிசக்தி | 16 | 48,199 | 6 | |
| 4 | வீட்டு வசதி | 66 | 48,980 | CMDA – 41 | 23 |
| | | | | DTCP - 25 | - |
| 5 | சுற்றுலா | 8 | 642 | 8 | |
| 6 | வேளாண்மை | 2 | 2,010 | 2 | |
| 7 | உயர்கல்வி | 51 | 1,013 | Technical Education – 29 | 24 |
| | | | | College Education – 22 | 12 |
| 8 | பள்ளிக்கல்வி | 3 | 157 | - | |
| | **மொத்தம்** | **304** | **2,68,225** | **221** | |
| 9 | சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் | **12360** | **32,205** | **2,783** | |
| | | | **3,00,431** | | |

## பிற முதலீடுகள்

இவை மட்டுமல்லாது, CEAT Tyres, SIEMENS, Jinyoung Sandhar, Hitech Gears உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் தமது முதலீடுகளை தமிழ் நாட்டில் மேற்கொண்டுள்ளன. இதில் குறிப்பாக, ரூபாய் 4,000 கோடி முதலீடு செய்துள்ள CEAT நிறுவனம் அனைத்து கட்டுமான பணிகளையும் ஒரே ஆண்டில் நிறைவு செய்து, வரும் அக்டோபர் மாதம் வணிக உற்பத்தியை துவக்கவுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அளித்த தொடர் வழிகாட்டுதல்களே, இவ்வளவு விரைவான செயல்பாட்டிற்கு காரணம் என்றால் அது மிகையாகாது.

மேலும், உலகின் பல்வேறு பகுதிகளில் பொருளாதார தேக்க நிலையின் தாக்கம் இருக்கும்போது கூட இந்திய அளவில் முதலீடுகளை ஈர்க்கும்

மாநிலங்களில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகித்து புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி வருகிறது.

## இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரக அரசு முறைப்பயணம்

பல்வேறு தொழில் துறையினர் வழங்கிய ஆலோசனையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், அமைச்சர்கள், அதிகாரிகள் கொண்ட குழு இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக அரசு முறைப்பயணம் மேற்கொண்டனர்.

பெருவெற்றி பெற்ற இப்பயணம், தமிழ்நாட்டின் மீது வெளிநாட்டு முதலீட்டாளர்களிடையே ஒரு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகம் சார்ந்த அறிவுசார் புரிதலுக்கு இந்தப்பயணம் ஒரு பேருதவியாக அமைந்தது. இதுதவிர மொத்தம் **41** நிறுவனங்களின் ரூபாய் **8,835** கோடி மதிப்பீட்டிலான முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு ஈர்த்து, முப்பத்தைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வாய்ப்பும் இப்பயணத்தால் கிடைத்தது.

| **வ. எண்** | **இடம்** | **ஒப்பந்தங்களின் எண்ணிக்கை** | **முதலீடு (ரூ. கோடியில்)** | **வேலைவாய்ப்பு** |
|---|---|---|---|---|
| 1 | அமெரிக்கா | 27 | 5,085 | 24,720 |
| 2 | அமெரிக்கா – தொழில் கூட்டமைப்புகள் | 8 | - | - |
| 2 | துபாய் | 6 | 3,750 | 10,800 |
| | **மொத்தம்** | **41** | **8,835** | **35,520** |

மேலும், லண்டன் ஸ்கூல் ஆப் ஹைஜீன் மற்றும் டிராபிகல் மெடிசன் நிறுவனத்துடன் நோக்க அறிக்கை, இங்கிலாந்து மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களின் பணித்திறன் மேம்பாடுகளைக் கண்டறிந்து,

அதனை தமிழ்நாட்டில் செயல்படுத்திட, சர்வதேச திறன் மேம்பாட்டு நிறுவனத்துடனும், தமிழ்நாட்டில் கிங்ஸ் மருத்துவமனையின் கிளையை நிறுவிட கிங்ஸ் மருத்துவமனையுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

முதல்முறையாக உலக தமிழர்களின் முதலீடுகளை, தமிழ்நாட்டிற்கு ஈர்க்கவும், தமிழ்நாட்டின் தொழில் துறை வளர்ச்சிக்கு அவர்களின் ஆலோசனைகளை பெறவும், **"யாதும் ஊரே"** என்ற புதிய திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நியூ யார்க் நகரில் துவக்கி வைத்தார். இது உலக தமிழர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

## பிற புள்ளி விவரங்கள்

- மத்திய அரசின் புள்ளியியல் துறை சமீபத்தில் வெளியிட்டுள்ள தொழிற்சாலைகளுக்கான ஆண்டு ஆய்வு அறிக்கையின்படி, (Annual Survey of Industries 2015–16 மற்றும் 2016–17) **தொழிற்சாலை வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.**
- தில்லி மாநிலத்தில் உள்ள மொத்த தொழிற்சாலை வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கைக்கு ஈடாக ஒரே ஆண்டில் மட்டும் தமிழ்நாடு புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது.
- எண்ணிக்கை அடிப்படையில், ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் உள்ள மொத்த தொழிற்சாலை வேலைவாய்ப்புகளைவிட இரு மடங்கு வேலைவாய்ப்புகள் தமிழ்நாட்டில் உள்ளன.
- மேலும், ஆந்திர மாநிலம் ஓராண்டில் கூடுதலாக அளித்த நேரடி தொழிற்சாலை வேலைவாய்ப்பு 38,957; தெலுங்கானா மாநிலம் ஓராண்டில் கூடுதலாக அளித்த வேலைவாய்ப்பு 28,608; **தமிழ்நாடு அரசு, அதே காலத்தில் 73,328 புதிய, நேரடி, தொழிற்சாலை வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாக இந்த அறிக்கை தெரிவிக்கிறது. இதுதவிர, தொழிற்சாலைகளின் நிர்வாக பணிகள், மறைமுக வேலைவாய்ப்புகள், சேவைத் துறை உள்ளிட்ட பிற துறை வேலைவாய்ப்புகள்**

**என பல இலட்சம் புதிய வேலைவாய்ப்புகளை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.**

- 2016 –17 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017–18 ஆம் ஆண்டில் **தமிழ் நாட்டின் ஏற்றுமதி 12.5 சதவீதம் அதிகரித்து** 29.8 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது.

**ஆகவே பல்வேறு புள்ளிவிவரங்களை பார்க்கும்போது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் சீரிய நடவடிக்கைகளினால் தமிழ் நாடு, உலகெங்கிலும் உள்ள முதலீட்டாளர்களையும், இந்திய முதலீட்டாளர்களையும் ஈர்க்கும் திறனில், முன்னணி மாநிலமாக தொடர்ந்து விளங்குகிறது என்பதை அறியலாம்.**

இந்த புள்ளிவிவரங்கள் யாவும் அரசால் சட்டப்பேரவையிலும், அரசின் கொள்கை விளக்கக் குறிப்புகளிலும், செய்திகளிலும் தொடர்ந்து வெளியிடப்பட்டுவருகிறது. தொழில் நிறுவனங்களின் அடிக்கல் நாட்டு விழாக்கள், துவக்க விழாக்கள் என அனைத்தும் அனைவருக்கும் தெரியும் வகையில் வெளிப்படையாகவே நடைபெற்றுவருகின்றன. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் அனைத்து விவரங்களையும் பெற்றதாக மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் கூறுவதே அரசின் வெளிபடையான செயல்பாட்டிற்கு சான்று.

சுமார் ஒன்றரை வருடத்திற்கு முன்பு தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தில் பெறப்பட்ட RTI விண்ணப்பம் ஒன்றிற்கு தகவல் அளிக்கப்பட்டது. அதில் **உலக முதலீட்டாளர் மாநாடு – 2015–ல் வரப்பெற்ற முதலீடுகள் போக, அதேகாலத்தில், பிற தொழில் திட்டங்கள் மூலம், மேலும் 14,153.62 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டன என விவரம் அளிக்கப்பட்டது. இந்த தொகையை, உலக முதலீட்டாளர் மாநாடு 2015–ன் மூலம் இதுநாள் வரை வரப்பெற்ற மொத்த முதலீடே இதுதான் என்பது போல பொய்யாக திரித்துக் கூறுவது தான் பொறுப்புள்ள எதிர்கட்சி தலைவருக்கு அழகா?**

பல துறைகளிலும் முன்னணி இடத்தில் இருக்கிறோமே என மகிழ்ந்து நின்றுவிடாமல், **ஆசியாவின் மிகச் சிறந்த முதலீட்டு மையமாக தமிழ்நாடு திகழ்ந்திட வேண்டும் என்ற புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கனவினை நனவாக்க** நாளும் செயல்படுவதே அரசின் நோக்கம்.

மற்ற மாநில முதலமைச்சர்கள், முதலீடுகளை பெறுவதற்கு வெளிநாடு செல்கிறார்கள். அந்த மாநில எதிர்கட்சி தலைவர் உள்பட, அனைவரும் அதை வரவேற்று அரசுடன் மாநிலத்தின் வளர்ச்சிக்கு ஒத்துழைக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் தான் எந்த அடிப்படையும் இல்லாமல் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக **மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா** அவர்களின் அரசுக்கு நல்ல பெயர் வரக்கூடாது என எதிர்கட்சி தலைவர், திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அவதூறு பிரசாரம் செய்து வருகிறார்.

சிலரின் வெற்றுக்கூச்சல்களைப் புறந்தள்ளி, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் தலைமையிலான அரசு, இந்தியாவிலும் உலகெங்கும் தமிழ்நாட்டின் சிறப்புகளை எடுத்துக்கூறி தமிழ்நாட்டில் தொழில் துவங்க அழைப்புவிடுக்கும் பணிகளையும், தமிழ் நாட்டின் தொடர் வளர்ச்சியை நோக்கிய வெற்றிப்பயணத்தையும், பாரெங்கும் உள்ள தமிழ் மக்களின் நல்லாதரவோடு, தொடர்ந்து மேற்கொள்ளும் என உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**